# நாவலப்பிட்டடிய நகர சபை

# கண்டி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 22 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 செப்தெம்பர் 21 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நாவலப்பிட்டடிய நகர சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிகப்பட்டன.

(அ) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,004,108 பெறுமதியான சொத்துக்கள் நிலையான சொத்தாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) களஞ்சிய இருப்பாக மெய்மையாய்வு செய்யப்பட்ட இருப்புக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க வேண்டிய போதிலும் அதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் இறுதியில் பேரேட்டு மீதியான ரூபா 11,583,543 தொகை காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தொங்கல் கணக்குகளின் செலவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 305,978 ஆக இருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 24,604,530 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,705,142 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 8,376,974 ஆக இருந்தது

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

2011 செப்தெம்பர் 22 ஆந் திகதி சபையின் நாளாந்தப் பெறுவனவு ரூபா 41,997 தொகை குறைவாக வங்கியிலிடப்பட்டிருந்ததுடன் அதற்குப் பொறுப்பானவர் தொடர்பாக 2012 ஆகஸ்ட் 07 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 10,626 | 10,674 | 8,653 |
| (ii) | வாடகை | 13,078 | 14,146 | 2,364 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 905 | 1,132 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 3,065 | 5,485 | 8,160 |

### 2.3.2 முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 2,500,000 ஆகும்.

### 2.3.3 நீர்க்கட்டணம்

ஆண்டின் நீர்க்கட்டண அறவீடுகள் 13% ஆன மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் அதில் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 737,852 ஆகக் காணப்பட்டது.

### 2.3.4 கடை வாடகை

2009 ஆம் ஆண்டின் போது ரூபா 209 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட உயர்தர வியாபாரத் தொகுதியில் 13 கடைகள் 2012 யூலை 30 வரையிலும் கேள்வி கோரல் மூலம் வணிக வியாபார நடவடிக்கைகளுக்காக வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்தக் கடைகளிலிருந்து 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையினால் அறவிடவேண்டியிருந்த பணம் ரூபா 13,350,000 ஆக இருந்தது.

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சீருடைக்கான உரித்தற்ற பதவியணியினருக்கு சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் சீருடைகள் வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து ரூபா 44,264 தொகை செலவிடப்பட்டிருந்தன.

(ஆ) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 159(ஊ) பிரிவிற்கு முரணாக அமைச்சரின் எழுத்து மூல அங்கீகாரமின்றி கலாசார விழாவிற்காக ரூபா 17,000 தொகையும், சமய நடவடிக்கைகளுக்காக ரூபா 10,000 தொகையும், விளையாட்டு மற்றும் ஏனைய விழாக்கள் மற்றும் போட்டிகளுக்காக ரூபா 39,500 தொகையும் ஆக ரூபா 68,500 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தன.

(இ) 2009 செப்தெம்பர் 18 ஆந் திகதிய பீஎப்/437 ஆம் இலக்க திறைசேரிச் செயலாளரின் அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் சகல அரச மற்றும் அரை அரசாங்க நிறுவனங்களுக்குரிய வாகனங்களுக்கான காப்புறுதித் தேவைகள் தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்திலிருந்து அல்லது தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனத்திலிருந்து மாத்திரம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக சபையின் காப்புறுதித் தேவைகளை நிறைவேற்றுவதற்காக தனியார் நிறுவனத்திற்கு ரூபா 342,300 தொகை செலுத்தப்பட்டிருந்தன.

(ஈ) சபையின் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 158,644 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் இந்த வாகனங்களைப் பெறும்போது கொள்வனவு வழிகாட்டி பின்பற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே சில வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்ட கடமைகளும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 2.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக்குரிய 50 – 4770 ஆம் இலக்க கப் வாகனம் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் செயற்பாடின்றின் காணப்பட்டதுடன் அந்த வாகனத்தை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையில் சேவையாற்றுகின்ற இரண்டு ஊழியர்களுக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்புப் பணம் செலுத்தாமையினால் ரூபா 30,010 தொகையான மிகைக்கட்டணத்தை செலுத்த வேண்டியிருந்தது.

(இ) சபையின் நிரந்தர தொழிலாளர்கள் விடுமுறை பெறும் நாட்களில் அமையத் தொழிலாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் இவ்வாறாக நிரந்தரத் தொழிலாளர்கள் பெற்ற விடுமுறை நாட்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக தொழிலாளர் ஈடுபடுத்தப்பட்டு சபை நிதியத்திலிருந்து ரூபா 3,867,948 தொகை செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) மனித வள முகாமைத்துவம்
(உ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஊ) வாகனப் பயன்பாடு